**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 02/2021**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 16.02.2026 | | |
| பெயர்: | ராஜேஷ்<br>(PW– 1 Cross con) | தகப்பனார் பெயர்: | சேகர் |
| கிராமம்: | மடவாமேடு | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | மீன்பிடித்தொழில் | வயது : | 37/2026 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 16.02.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.08)**

1. 1ம் பிரதிவாதி என் மீது தாக்கல் செய்த OS.236/2020 வழக்கு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு என்பது வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்றும், அதில் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. நான் தாவா சொத்திற்கு சுமார் 7 வருடங்களாக வீட்டு வரி செலுத்தி வருகிறேன். பிரதிவாதிகள் செலுத்துகிறார்கள், நானும் செலுத்துகிறேன். நான் வீட்டு வரி செலுத்துவதற்கு வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 என்பது நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு 10 நாட்களுக்கு முன்பு பெறப்பட்டது என்றால் சரிதான்.

3. நான் தாவா சொத்திற்கு சுமார் 7 வருடங்களாக வீட்டு வரி செலுத்தி வருவதாக சொல்வது தவறு என்றாலும், நான் எனது செல்வாக்கினை

பயன்படுத்தி வா.சா.ஆ.1 ஆவணத்தை பெற்றுள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் மின் இணைப்பு 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. அதற்கு நான் மின் கட்டணம் செலுத்தி வருவதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

4. நான் வெளிநாட்டிற்கு சென்று பிரதிவாதிகளுக்கு பணம் அனுப்பவில்லை என்றாலும், வழக்கிற்காக அனுப்பினேன் என்று கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் உள்ள வீடு 1ம் பிரதிவாதியால் கட்டப்பட்டது என்றாலும் அதில் எனக்கு எவ்வித உரிமையும்
இல்லை என்றாலும் சரியல்ல.

5. வீடு கட்டியதில் எனக்கு எவ்வித பங்களிப்பும் கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கிற்கு எதிராக தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் எனது கட்சியை நிரூபிக்க கூடிய ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல.

6. எனது வழக்கு பொய்யான வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

**(முடிவு நேரம்– 12.22)**